27th June 1957]

சொன்னார்கள். ஆகவே, சிபார்சுகளில் ஏதாவது விடப்படுமா, அல்லது அத்தனை சிபார்சுகளையும் ஏற்றுக்கொள்ளப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI R. VENKATARAMAN : இது குறித்து என்னால் முன்கூட்டியே ஒன்றும் சொல்வதற்கில்லை.

SRI S. B. ADITYAN : பீடித் தொழிலாளர்கள் எனப்படுவதிலே பீடி "பிராஞ்ச் மானேஜர்" களும் இருக்கிறார்களே, அவர்களும் பாது காப்பிற்குள் வருவார்களா ? அல்லது, அவர்கள் வேலையை இழக்கக்கூடிய நிலைமை வருமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : நான் முன்பே இதில் பல சிக்கல்கள் இருக்கின்றன என்று சொன்னேன். கனம் அங்கத்தினர் அவர்கள் சொன்ன விஷயம்கூட ஒரு சிக்கல்தான். இதையும் பரிசீலனை செய்துதான் முடிவு செய்யப்படும். பில் பிரசுரிப்பதற்குமுன் ஒன்றும் சொல்வதற்கில்லை.

SRI V. K. KOTHANDARAMAN: முன்பு, பீடித் தொழிலாளர்களுக்கு ஒரு சட்டத்தைக் கொண்டுவரவேண்டுமென்று கேட்டபோது, மத்திய அரசாங்கத்தின் அனுமதி வேண்டுமென்று சொல்லப்பட்டது. இப்போது இது கமிஷனருடைய பரிசிலனையில் இருந்து வருகிறது என்று சொல்லப்படுகிறது. மீண்டும் மத்திய அரசாங்கத்தின் அனுமதி வேண்டுமென்று சொல்லப்படுமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : இந்த மசோதாவைத் தயாரித்து கொண்டுவரும் முறையை நான் விளக்கமாகச் சொன்னேன். பல இலாகாக்களுக்கு அனுப்பி அவர்கள் அபிப்பிராயத்தை கேட்டு, கடைசியாக எந்த இலாகா அதைத் தயாரிக்கவேண்டுமோ அதற்கு அனுப்பப்படுகிறது. இதனால், ஆரம்பபூர்வமாக செய்யப்படவேண்டிய பல காரியங்கள் செய்யப்பட்டுவிட்டன என்று பொருள்.

Godavari river water for Madras State.

*** 16 *Q.*—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Public Works be pleased to state whether there is any proposal to get water from Godavari river ?**

THE HON. SRI P. KAKKAN : Yes, the Chief Minister of Madras had discussions with the Chief Minister and the Deputy Chief Minister of the former State of Andhra on this question.

SRI N. K. PALANISAMI : இந்தமாதிரி தண்ணீர் எடுத்துக் கொள்வதற்கு அவர்கள் அனுமதித்துவிட்டார்களா ? அப்படி அனுமதித்து இருந்தால், இந்த விஷயத்தில் சர்க்கார் எடுத்துக்கொண்டிருக்கக்கூடிய நடவடிக்கைகள் என்னென்ன என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI P. KAKKAN : நமது சென்னை மாகாணத்தின் முதல் மந்திரி அவர்களும், ஆந்திர மாகாண முதன் மந்திரி அவர்களும் உதவி முதன் மந்திரி அவர்களும் கூடிப்பேசி இருக்கிறார்கள். இதற்குள்ளாக, இந்த சமயத்தில் ஒன்றும் சொல்ல முடியாது. அவர்களும் இந்த மாகாணத்திலிருந்து பிரிந்து சென்றதால் அவர்களுக்கு நிலைமை தெரியும். இரண்டு சர்க்கார்களும் கலந்து ஆலோசித்து நல்ல முறையில் முடிவு செய்யும்.

SRI P. S. CHINNADURAI : கோதாவரித் தண்ணீர் இந்த ராஜ்யத்திற்கு கொண்டுவரப்படும்போதாவது கோயம்புத்தூர் ஜில்லாவில் பாதிக்கப்பட்ட தாலூகாக்களும் இதனால் பலன் அடையுமா ? அதற்கு வேண்டிய முயற்சிகளைச் செய்வதற்கு அரசாங்கம் தக்க நடவடிக்கைகள் எடுக்குமா ?

THE HON. SRI P. KAKKAN : கோயம்புத்தூர் ஜில்லா ரொம்ப தூரத்தில் இருக்கிறது. இந்தத் தண்ணீரைக் கொண்டுவந்தால், செங்கல்பட்டு, தென்னாற்காடு, வடாற்காடு மற்றும் சென்னை நகரத்திற்கு உதவியாக இருக்கும். கோயம்புத்தூர் ஜில்லாவில், அங்கு ஒரு நல்ல திட்டம் இருக்கிறது.

SRIMATHI T. N. ANANDANAYAKI : இரண்டு முதன் மந்திரிகளும் பேசியதன் விளைவு நன்மையாயிருக்குமா, தீமையாயிருக்குமா என்று சொல்வார்களா ?

THE HON. SRI P. KAKKAN : இரண்டு முதன் மந்திரிகளும் எப்போதும் நல்லதுதான் செய்வார்கள்.

SRI K. KARUTHAPPA GOUNDER : கனம் மந்திரி அவர்கள் வட ஆற்காடு என்று சொல்லும்போது, எந்தப் பகுதியை வட ஆற்காடு என்று சொன்னார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI P. KAKKAN : பகுதிகளை சொல்ல முடியாது. பின்னர் பார்ப்போம்.

III.—CALLING ATTENTION TO A MATTER OF URGENT PUBLIC IMPORTANCE UNDER RULE 40 OF THE ASSEMBLY RULES, NAMELY, CYCLONE IN MELAMEIGNANAPURAM IN TENKASI TALUK.

MR. SPEAKER : இப்பொழுது இரண்டு அங்கத்தினர்கள், செல்வராஜன் அவர்களும், ஆதிமூலம் அவர்களும், 40-வது விதிப்பிரகாரம் சர்க்கார் கவனத்துக்கு சில விஷயங்களை கொண்டுவருவதாக அறிக்கை கொடுத்திருக்கிறார்கள். அவர்களை அந்த விஷயங்களை விளக்கும்படியாக கேட்டுக்கொள்ளுகிறேன்.

* **SRI M. S. SELVARAJAN** : கனம் சபாநாயகர் அவர்களே, சென்ற முறை நாமெல்லோரும் சட்டசபை நடவடிக்கைகளில் முனைந்து கொண்டிருந்த நேரம் பார்த்து திருநெல்வேலி ஜில்லாவில், தென்காசி தாலூகாவில், குறிப்பாக மேலமெஞ்ஞானபுரம் என்ற ஊரில் புயல் பத்து நிமிஷ நேரம் வேகமாக வீசியது. பத்து நிமிஷம்தான் வீசிய தென்றாலும் ஏற்பட்ட சேதத்தை குறைவாக மதிப்பதற்கில்லை என்று நான் நேரில் பார்த்தபோது தெரிந்தது. புயலின் வேகம், ஒரு பர்லாங் தூரத்திற்கு நான்கு பேர்கள் தூக்கவும் முடியாத ஒரு மாமரத்தை தூக்கி எறிந்து அங்கு ஒரு மனிதனுக்கும், மாட்டிற்கும் காயம் விளைவித்திருக்கிறது. அந்த அளவில் அங்குள்ள மாமரங்கள், பல தென்னை மரங்கள், வாழைகள் போன்ற மரங்களின் சேதத்தோடு, வீடுகளுக்கும் குறிப்பிடத் தகுந்த சேதம் விளைவிக்கப்பட்டிருக்கிறது. நமது அரசாங்கம் ஓரளவுக்கு நிவாரணம் கொடுத்திருப்பதாகத் தெரிகிறது. நபர் ஒன்றுக்கு ஏறத் தாழ ரூபாய் 25 அல்லது 30 வீதம் கொடுக்கப்பட்டிருக்கிறது. என்றாலும், நிலம் இருக்கிற விவசாயிகள் சிலருக்கு, பட்டா இருப்பவர்கள் என்ற காரணத்திற்காக சேதம் இருந்தாலும்கூட, அந்த பலன் கிடைக்காதிருக்கிறது. இது போன்ற கஷ்ட நிலையில் இதையெல்லாம் கணக்கில் வைக்காது ஓரளவு பட்டா இருக்கிற நிலச்சுவான் என்ற காரணத்திற்காக அந்த நிவாரணம் மறுக்கப்படாமல் பார்த்துக்கொள்ளவேண்டியது அரசாங்கத்தின் கடமை என்று நான் நினைக்கிறேன். இந்தப் பத்து நிமிஷங்கள் வீசிய புயல் இன்னும்கூட சில இடங்களில் வீசியிருக்கலாம். இதுபோன்றவைகளையெல்லாம் வானிலை அறிக்கை மூலமாக, ஹேஷ்யங்கள் மூலமாக முன்னறிவிக்கப்படவேண்டிய விஷயங்கள். இங்கே ஒரு சில இடங்களில் மாத்திரம் இந்த ஹேஷ்யம் அறிவிக்கப்படுகிறது. இது போதாது. பல இடங்களில் அறிவிக்க ஏற்பாடு செய்யவேண்டும். இதையெல்லாம் கவனத்தில் வைத்து வானிலை ஹேஷ்யங்களுக்கு வேண்டிய ஏற்பாடுகளை பரவலாக அமைக்க செய்வார்கள் என்று நான் நம்புகிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : கனம் சபாநாயகர் அவர்களே திருநெல்வேலி கலெக்டர் அவர்கள் கொடுத்த தகவலிலிருந்து தென்காசி தாலுகாவில் சமீபத்தில் புயல்காற்று ஒன்றுமே வரவில்லை என்று